செ.வெ.எண் : 307

நாள் 27-05-2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

**அறிக்கை - 26.05.2011**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வனக்கோட்டம், தேன்கனிக்கோட்டை வனச்சரகம், அய்யூர் காப்புக்காட்டில் திரு. லகுமைய்யா என்பவரின் மகன் திரு. முனியப்பன் மற்றும் நீலகிரி மாவட்டம், கூடலூர் சரகம், சில்வர் கிளவுட் எஸ்டேட் பகுதியைச் சார்ந்த திரு சாடிலால் சாட்ரி என்பவரின் மகன் திரு. டி.பி. சாட்ரி, பண்டலூர் சரகம், இரும்புபாலம் ஆமைக்குளம் பகுதியைச் சார்ந்த திரு.மாயப்பன் என்பவரின் மகன் திரு.சிவப்பிரகாசம் என்கின்ற ஜீவா ஆகிய மூவரும் 25.5.2011 அன்று காட்டு யானை தாக்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியை அறிந்து மிகவும் துயருற்றேன்.

இவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்திற்கும் வனத் துறை மூலம் தலா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளதுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்